



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு தலைமைச் செயலக ஊழியர் சங்கம், ஜாக்டோஜியோ கூட்டமைப்பு, தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம், தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கம், தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியம், தமிழ்நாடு அனைத்து அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் மற்றும் உள்ளாட்சி பணியாளர்கள் சங்கங்களின் கூட்டமைப்பு போன்ற பல்வேறு சங்கங்களின் நிர்வாகிகள் சந்தித்து, அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் நலன் கருதி பல்வேறு அறிவிப்புகளை சட்டமன்றப் பேரவையில் அறிவித்தமைக்காக நன்றி தெரிவித்துக் கொண்டனர். உடன் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் எ.வ. வேலு, தங்கம் தென்னரசு, அன்பில் மகேஸ் பொய்யாமொழி, முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், நிதித்துறை முதன்மைச் செயலாளர் த. உதயச்சந்திரன், அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு தலைமைச் செயலக ஊழியர் சங்கம், ஜாக்டோஜியோ கூட்டமைப்பு, தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம், தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கம், தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியம், தமிழ்நாடு அனைத்து அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் மற்றும் உள்ளாட்சி பணியாளர்கள் சங்கங்களின் கூட்டமைப்பு போன்ற பல்வேறு சங்கங்களின் நிர்வாகிகள் சந்தித்து, அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் நலன் கருதி பல்வேறு அறிவிப்புகளை சட்டமன்றப் பேரவையில் அறிவித்தமைக்காக நன்றி தெரிவித்துக் கொண்டனர். உடன் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் எ.வ. வேலு, தங்கம் தென்னரசு, அன்பில் மகேஸ் பொய்யாமொழி, முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், நிதித்துறை முதன்மைச் செயலாளர் .த. உதயச்சந்திரன், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு தலைமைச் செயலக ஊழியர் சங்கம், ஜாக்டோஜியோ கூட்டமைப்பு, தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம், தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கம், தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியம், தமிழ்நாடு அனைத்து அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் மற்றும் உள்ளாட்சி பணியாளர்கள் சங்கங்களின் கூட்டமைப்பு போன்ற பல்வேறு சங்கங்களின் நிர்வாகிகள் சந்தித்து, அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் நலன் கருதி பல்வேறு அறிவிப்புகளை சட்டமன்றப் பேரவையில் அறிவித்தமைக்காக நன்றி தெரிவித்துக் கொண்டனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு தலைமைச் செயலக ஊழியர் சங்கம், ஜாக்டோஜியோ கூட்டமைப்பு, தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம், தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கம், தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியம், தமிழ்நாடு அனைத்து அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் மற்றும் உள்ளாட்சி பணியாளர்கள் சங்கங்களின் கூட்டமைப்பு போன்ற பல்வேறு சங்கங்களின் நிர்வாகிகள் சந்தித்து, அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் நலன் கருதி பல்வேறு அறிவிப்புகளை சட்டமன்றப் பேரவையில் அறிவித்தமைக்காக நன்றி தெரிவித்துக் கொண்டனர். உடன் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உள்ளிட்ட அமைச்சர்கள் உள்ளனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு தலைமைச் செயலக ஊழியர் சங்கம், ஜாக்டோஜியோ கூட்டமைப்பு, தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம், தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கம், தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியம், தமிழ்நாடு அனைத்து அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் மற்றும் உள்ளாட்சி பணியாளர்கள் சங்கங்களின் கூட்டமைப்பு போன்ற பல்வேறு சங்கங்களின் நிர்வாகிகள் சந்தித்து, அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் நலன் கருதி பல்வேறு அறிவிப்புகளை சட்டமன்றப் பேரவையில் அறிவித்தமைக்காக நன்றி தெரிவித்துக் கொண்டனர். உடன் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மற்றும் அமைச்சர்கள் உடன் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு தலைமைச் செயலக ஊழியர் சங்கம், ஜாக்டோஜியோ கூட்டமைப்பு, தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம், தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கம், தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியம், தமிழ்நாடு அனைத்து அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் மற்றும் உள்ளாட்சி பணியாளர்கள் சங்கங்களின் கூட்டமைப்பு போன்ற பல்வேறு சங்கங்களின் நிர்வாகிகள் சந்தித்து, அரசு™ ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் நலன் கருதி பல்வேறு அறிவிப்புகளை சட்டமன்றப் பேரவையில் அறிவித்தமைக்காக நன்றி தெரிவித்துக் கொண்டனர். உடன் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மற்றும் அமைச்சர்கள் உடன் உள்ளனர்.

### திண்டுக்கல் மாவட்டம் – கொடைக்கானல் வட்டம் – மன்னவனூர் கிராமத்தில்

# காட்டுப்பன்றி தாக்கி காயமடைந்தவர்களுக்கு நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, மே 1**

**திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல் வட்டம், மன்னவனூர் கிராமத்தில் காட்டுப்பன்றி தாக்கி காயமடைந்தவர்களுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆறுதல் கூறி நிதியுதவி அறிவித்துள்ளார்.**

முதல்வரின் அறிக்கை வருமாறு:-

திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல் வட்டம், மன்னவனூர் கிராமம், உட்கடை கும்பூர், கும்பக்காடு பகுதியைச் சேர்ந்த ஜெயராஜ் (வயது 65) (த/பெ.கிருஷ்ணசாமி), திருமதி. சுசிலா (வயது 60) (க/பெ.ஜெயராஜ்) ஆகியோர் 26.4.2025 அன்று காலை சுமார் 10.00 மணியளவில் விவசாயப் பணியில் ஈடுபட்டிருந்தனர். அவர்களுடன் சிறுவன் சிவன்பாண்டி (வயது 8) (த/பெ.சந்திரசேகர்) உடனிருந்துள்ளார்.

அந்நிலையில் விவசாய நிலத்தில் பணியின்போது எதிர்பாராதவிதமாக புதருக்குள் இருந்து வெளியே வந்த காட்டுப்பன்றி தாக்கியதில் மேற்படி மூன்று நபர்களும் பலத்த காயமடைந்து உடனடி யாக மன்னவனூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் முதலுதவி அளிக்கப்பட்டு, மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர் என்ற செய்தியைக் கேட்டு மிகுந்த வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

இச்சம்பவத்தில் காயமடைந்து சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு சிறப்பான சிகிச்சை அளிக்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

மேலும், இந்தச் சம்பவத்தில் காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு என்னுடைய ஆறுதலைத் தெரிவித்துக்கொள்வதோடு, பலத்த காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சைபெற்று வரும் திருமதி.சுசிலா மற்றும் சிறுவன் சிவன்பா ண்டி ஆகியோருக்கு தலா ஒரு இலட்சம் ரூபாயும், லேசான காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் ஜெயராஜ் என்பவருக்கு ஐம்பதாயிரம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

### பூவிருந்தவல்லி – குன்றத்தூர் –

# பல்லாவரம் சாலைப் பணிகளை விரைவுபடுத்துவீர்!

## அமைச்சர் எ.வ.வேலு நேரில் ஆய்வு செய்து உத்தரவு!

சென்னை, மே.1-

பூந்தமல்லி - குன்றத்தூர் - பல்லாவரம் சாலையை அகலப்படுத்த 2014 ஆம் ஆண்டு அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டு, நிலஎடுப்புப் பணிகள் முடியாத நிலை இருந்ததால், நேற்று (30.04.2025) காலை, பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு , குறு, சிறு, நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஆகியோர் கள ஆய்வு மேற்கொண்டனர்.

பூந்தமல்லி குன்றத்தூர் பல்லாவரம் சாலை GST சாலையில் தொடங்கி கோடம்பாக்கம் திருப்பெரும்புதூர் சாலையில் இணைகிறது. இச்சாலை சென்னை மற்றும் புறநகரில் உள்ள சாலைகளில் ஒரு முக்கியமான சாலையாகும். இச்சாலை பல்லாவரம் பம்மல் பொழிச்சலூர் அனகாபுத்தூர், குன்றத்தூர் ஆகிய முக்கிய இடங்களையும் மற்றும் GST சாலை, சென்னை புறவழிச்சாலை, வெளிவட்டச்சாலை ஆகிய சாலைகளை இச்சாலை இணைப்பதினால், போக்குவரத்து செறிவு மிகவும் அதிகமாக காணப்படுகிறது. பூந்தமல்லி குன்றத்தூர் பல்லாவரம் சாலை சென்னையில் ஒரு முக்கியமான போக்குவரத்து மையமாகும், மேலும் இச்சாலை நகரத்தின் பல்வேறு பகுதிகளை இணைப்பதில் குறிப்பிடத்தக்க பங்கை வகிக்கிறது. அனகாபுத்தூர் புறவழிச்சாலையிலிருந்து பல்லாவரம் MARS ஹோட்டல் வரை, போக்குவரத்து நெரிசல் உள்ள நேரங்களில், வாகனங்கள் 4 கி.மீ. தூரம் காத்திருக்க வேண்டியுள்ளது.

தற்போதைய இரண்டு வழிச்சாலையின் அகலம் சில இடங்களில் 9 மீட்டராகவும், சில இடங்களில் 10 மீட்டராகவும் உள்ளது. தற்போது இச்சாலையில் வாகனப் போக்குவரத்து செறிவு மிக அதிகமாக உள்ளது. CMDA Master Plan IIIஐ கருத்தில் கொண்டு, 24மீ அகலம் தேவையென முடிவெடுத்து, நிலஎடுப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

அதன்படி, பூந்தமல்லி குன்றத்தூர் பல்லாவரம் சாலையின் 7 கி.மீ.க்கு நிலம் கையகப்படுத்தும் பணியும், மேலும், ஆறு கிராமங்களில், ஈசா பல்லாவரம், பம்மல், அனகாபுத்தூர், திருநாகேஸ்வரம், மனஞ்சேரி மற்றும் குன்றத்தூர் B பகுதி, ஆகிய கிராமங்களில் நிலஎடுப்புப் பணி பல்வேறு கட்டங்களில் நடைபெற்று வருகின்றன.

நிலஎடுப்புப் பணிகளை ஆய்வு செய்த அமைச்சர் எ.வ.வேலு, நிலஎடுப்புப் பணிகளில் உள்ள இடர்பாடுகளை கேட்டறிந்து, அவற்றை களைந்து விரைவுப் படுத்த கேட்டுக் கொண்டார்.

இந்த ஆய்வின்போது, பல்லாவரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, நெடுஞ்சாலைத் துறை கட்டுமானம் மற்றும் பராமரிப்பு அலகின் தலைமைப் பொறியாளர் கு. கோ.சத்தியபிரகாஷ், சிறப்பு அலுவலர்(தொழில் நுட்பம்) இரா.சந்திரசேகர், கண்காணிப்புப் பொறியாளர் எஸ்.செல்வக்குமார் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

### திருவள்ளூர் கிழக்கு மாவட்டம்

# தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல் வேட்பு மனுத் தாக்கல்

## தலைமைக் கழக அறிவிப்பு

திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில், திருவள்ளூர் கிழக்கு மாவட்டம், தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து. வருகிற 2025, மே 3 (சனிக்கிழமை) அன்று ரூ.25000/ வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.

வேட்புமனுவினை முன்மொழிபவரும், வழிமொழிபவரும் திருவள்ளூர் கிழக்கு மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றிய/ நகர/ பேரூர்ச் செயலாளர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட பிரதிநிதிகளாகத்தான் இருக்க வேண்டும்.

வேட்புமனு விண்ணப்பப் படிவம் ஒன்றுக்கு ரூ.1000/ வீதம் கட்டணம் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

அண்ணா அறிவாலயம்
சென்னை 18.
நாள் : 30-04-2025.

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர்
தி.மு.க.

### தஞ்சாவூர் மாவட்டம் இராசராசசோழன் மணிமண்டபம் - அருங்காட்சியகம்

# ரூ. 3 கோடியே 66 இலட்சம் மதிப்பில் புதுப்பித்தல்!

## அமைச்சர் முனைவர் கோவி.செழியன் திறந்து வைத்தார்.

தஞ்சை, மே 1 -

தஞ்சாவூர் மாவட்டம் மாமன்னர் இராசராச சோழன் மணிமண்டபம் மற்றும் அருங்காட்சியகம் மேம்படுத்துதல் மற்றும் புதுப்பித்தல் பணிகள் முடிக்கப்பட்டு மாண்புமிகு உயர் கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் நேற்று (30.04.2025) திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் திருமதி.பா.பிரியங்கா பங்கஜம், தலைமையில், துரை.சந்திரசேகரன், டி.கே.ஜி.நீலமேகம், மேயர் சண்.இராமநாதன் , துணை மேயர் மரு.அஞ்சுகம் பூபதி , ஆணையர் க.கண்ணன், வருவாய் கோட்டாட்சியர் திருமதி.இலக்கியா , பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் (கட்டடம்) நாகவேல், தஞ்சாவூர் வட்டாட்சியர் சிவகுமார் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் மாநகராட்சி மாமன்னர் இராசராச சோழனின் பிறந்த நாளை அரசு விழாவாக கொண்டாடப்படும் எனவும், தஞ்சாவூரிலுள்ள மாமன்னர் இராசராச சோழன் மணிமண்டபம் மேம்படுத்தி பொழிவூட்டப்படும் என கடந்த 02.11.2022 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிப்பு வெளியிடப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, தஞ்சாவூர் மாநகராட்சி மாமன்னர் இராசராச சோழன் மணிமண்டபத்தில் மேம்படுத்துதல் மற்றும் புதுப்பித்தல் பணிகள் பொதுப்பணித்துறை மூலம் மேற்கொள்ளப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. என அமைச்சர் பேசுகையில் கூறினார்.

**தமிழ்நாடு மின் உற்பத்தி கழகம்**
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அழைப்பு அறிவிப்பு

| ஒப்பந்த விவரக் குறிப்பீடு எண் | ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர் | பணியின் விவரம் |
|---|---|---|
| 17 | மே.பொ./கொ&நி/வ.செ.அ.மி.நி - I | SS 316 Expansion bellow for ESP Hopper Ash Disposal system |
| 18 | மே.பொ./கொ&நி/வ.செ.அ.மி.நி | Horizontal Guide vane assembly for the flue gas duct |

மின்னணு (e-tender) ஒப்பந்தப்புள்ளிகளின் பணி / பொருட்கள் சமர்ப்பிக்கும் / திறக்கப்படும் கடைசி நாள் மற்றும் இணையதளத்தில் காண பதிவிறக்கம் செய்யும் நாள் / நேரம் போன்ற முழு விவரங்களுக்கு கீழ்க்கண்ட இணையதளங்களை காணவும்: www.tangedco.gov.in, www.tntenders.gov.in, www.tenders.tn.gov.in

செ.ம.தொ.இ/1821/ஒப்பந்தப்புள்ளி/2025

**பெருநகர சென்னை மாநகராட்சி**
**வடக்கு வட்டாரம்**

வ.வ.அ.இ.பொ.து.ந.க.எண்.B4/188/2025

**குறுகியகால மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**

கீழ்கண்ட பணிக்கு மேற்பார்வை பொறியாளர் (வடக்கு) அவர்களால் குறுகியகால மின்னணு ஒப்பம் கோரப்படுகிறது

பணியின் பெயர் :- HIRING OF LCVs 20 Nos. & 01 No FRONT END LOADER FOR CONSERVANCY OPERATIONS AT DVN-35, ZONE IV - FOR A PERIOD OF 60 DAYS.

பணியின் மதிப்பு:- ரூ.37,82,419/- முன் வைப்பு தொகை:- ரூ.38,000/-

ஒப்ப படிவம் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் : 08.05.2025 மாலை 03.00 மணி
ஒப்ப திறப்பு நாள் மற்றும் நேரம் : 09.05.2025 மாலை 03.15 மணி
மேலும் விபரங்களுக்கு : http://tntenders.gov.in

செ.ம.தொ.இ / 1807 / ஒப்பந்தப்புள்ளி / 2025 **மேற்பார்வை பொறியாளர் (வடக்கு)**